**கவனிக்க** .- *23.08.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1826 - 2013 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2013.08.30

*1826 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1764 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1767 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சட்டத்தின்கீழ் 2011 ஆம் ஆண்டின் காலாண்டிற்கான (ஏப்பிறல்-யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## பேரவைச் செயலகம், கிழக்கு மாகாணம், திருகோணமலை

பதவிகள் வெற்றிடம்

*கிழக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பின்வரும் ஆரம்பநிலை (தேர்ச்சியற்ற நிலை) "திணைக்களத் தொழிலாளி" பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கிழக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. **பதவிகள் :**
   (1) விடுதிக்காப்பாளர் தரம் III - 01
   (2) காப்பாளர் தரம் III - 01

2. ***சம்பள அளவுத்திட்டம்.***- இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இல் (PL - 1 - 2006 A) இற்கமைய ரூபா 11,730-10 × 120 - 10 × 130 - 10 × 145 - 12 × 160 - ரூபா 17,600 ஆகும்.

3. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

3.2 விண்ணப்பதாரர், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் உள்ள 06 வருடங்களில் 03 வருடங்கள் கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும் ;

3.3 விண்ணப்பதாரர், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 45 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

3.4 விண்ணப்பதாரிகள் நன்னடத்தையுள்ளவர்களாகவும், கிழக்கு மாகாணத்தின் எந்த ஒரு பகுதியிலும் சேவையாற்றுவதற்குரிய உடல் ரீதியானதும், மனோரீதியாக தகுதிகளையுடையவராக இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும் ;

4.2 விதவைகள்/தபுதாரர் அனாதைகள் உபகாரச் சம்பள நிதியத்தில் அங்கத்துவம் பெறல் வேண்டும் ;

4.3 நியமனம் 03 வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது. II ஆவது I ஆவது மற்றும் விசேட வகுப்புகளுக்கு பதவி உயர்வு பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் ஒரு வருட சேவை சோதனைக் காலத்திற்கு உட்படல் வேண்டும் ;

4.4 III ஆவது வகுப்பில் பதவி வகிப்போரை மூன்று வருட நன்னடத்தைக் காலப்பகுதியில் சேவையும், வரவும், நடத்தையும் திருப்திகரமாக இருக்கும் பட்சத்திலும், I ஆவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையுமிடத்து பதவியில் உறுதிப்படுத்தப்படுவர்;

4.5 தாபன விதிக்கோவை II ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏனைய பொது நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும் ;

4.6 அரச, மாகாண சபை, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஆகியோரால் தற்போது விதிக்கப்பட்டுள்ளதும், காலத்திற்கு காலம் விதிக்கப்படுவதுமான நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும் ;

4.7 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 5 வருட காலத்திற்குள் அரச சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கருமமொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக பேரவைச் செயலாளரினால் நடாத்தப்படும் வாய்மொழி மூலமான பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **கல்வித் தகைமைகள் :**

5.1 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

6. நியமனம் பெற்றுக்கொள்ளும் வகுப்பிற்குரிய நான்காவது சம்பள படிமுறைக்கு முன்னர் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**7. ஆட்சேர்ப்பு முறை :**

7.1 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும். அந்நேர்முகப் பரீட்சை கட்டமைப்பு நேர்முகப்பரீட்சையாதலால் பின்வரும் ஆவணங்களையும் அதன் நிழற்படப்பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) உரிய கல்விச் சான்றிதழ் பாடசாலையிலிருந்து விலகிய சான்றிதழ் ;

(iii) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் ;

(v) சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ் ;

(vi) தொழில் பயிற்சி பற்றிய சான்றிதழ் ;

(vii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் அல்லது வாக்காளர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

**8. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

8.1 ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்கலாம்.

8.2 அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஏ4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து 10.09.2013 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், பேரவைச் செயலகம், கிழக்கு மாகாண சபை, திருகோணமலை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் போதுமானது).

8.3 விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மூலையில் "திணைக்கள தொழிலாளி" என குறிப்பிடல் வேண்டும்.

8.4 முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படும்.

8.5 விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் பாடசாலை அதிபர்/கிராம உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

9. நியமனம் நடைமுறைப்படுத்தும் திகதி, செயலாளர், பேரவைச் செயலகம் அவர்களால் நிர்ணயிக்கப்படும்.

க. கருணாகரன்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்.

பேரவைச் செயலகம்,
கிழக்கு மாகாண சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிழக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் திணைக்கள தொழிலாளி தர பதவிக்கான விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

 1.1 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.

 2.1 பிரதேச செயலாளர் பிரிவு :----.

 2.2 கிராம உத்தியோகத்தர் பிரிவு இலக்கம் :----.

 2.3 பெயர் :----.

3. நிரந்தர முகவரி :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. ஆண்/பெண் :----.

திருமணமானவர்/திருமணமாகாதவர் :----.

6. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.

7. கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் காலம் :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள்:----.

8. நீங்கள் இலங்கை பிரசையாவது பிறப்பிலா ?/ பதிவின் மூலமா ? :----.

விபரங்களை குறிப்பிடுங்கள் :----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) :

(i) பரீட்சையின் பெயர் :----.

(ii) பரீட்சை நடந்த ஆண்டும், மாதமும் :----.

(iii) பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

10. தொழில் தகைமைகள் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்) :----.

11. சேவை அனுபவம் :----.

12. நீங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்ற தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவரா? அவ்வாறாயின் விபரங்கள் :----.

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள்/தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவையாக இருப்பின் நான் பதவிக்கு பொருத்தமில்லையென்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் விபரங்கள்/தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவையென தெரியவந்தால் நான் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும், என்னால் எவ்விதமான நஷ்டஈட்டுக்கும் உரிமைகோர முடியாதென்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**உறுதிப்படுத்தல்**.- இவ்விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ........................................................ அவர்கள் ....................... ஆந் திகதி ............................... இல் எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
பெயர் :----.
இறப்பர் முத்திரை :----.

திகதி :----.

8-891

# பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும்

## தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவில் வெற்றிடமுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் - 2013

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்படும் தகைமைகளுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து இவ்வாணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| குறியீட்டு அட்சரம் | பதவிகள் | திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட |
|---|---|---|
| A | வருமானப் பரிசோதகர் சேவையில் தரம் - III | திறந்த |
| B | வருமானப் பரிசோதகர் சேவையில் தரம் - III | மட்டுப்படுத்தப்பட்ட |

2. தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற எழுத்துமூலமான பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கு முறையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் உள்ள வெற்றிட எண்ணிக்கைகளுக்கு ஏற்ப கீழ்க்காணும் விதத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கையை முடிவு செய்யும் அதிகாரம் தென்மாகாண அரசசேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

| குறியீட்டு அட்சரம் | பதவிகள் | தொகுப்பு | சதவீதம் |
|---|---|---|---|
| A | வருமானப் பரிசோதகர் சேவையில் தரம் - III | திறந்த | 70% |
| B | வருமானப் பரிசோதகர் சேவையில் தரம் - III | மட்டுப்படுத்தப்பட்ட | 30% |

3. **தகைமைகள் :-**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

II. உடல் நலம் மற்றும் மன நலமுடையவராகவும் நன்னடத்தையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

III. வதிவிடத்தை ஒப்புவித்தல் :

A. வருமான பரிசோதகர் சேவையின் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை, தென் மாகாணத்தினுள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குக் கிட்டிய மூன்று வருடங்கள் விண்ணப்பஞ் செய்யும் மாவட்டத்தினுள் வசித்ததாக நிரூபித்தல் வேண்டும். அதற்காக அவ்வாறு வசிக்கின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்ட உறுதிப்பத்திரம் உரிய பிரதேச செயலாளரால் மேல் ஒப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

B. வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.- வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக இவ்விண்ணப்பதாரர்களுக்கு மேற்குறித்த பிரிவு ஏற்புடையதன்று.

IV. அவ்வாறான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்பு அவ்வப் பதவிகளுக்குரிய கீழ்க்காணும் கல்வித் தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும் :-

A. வருமான பரிசோதகர் சேவையின் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை.-

(i) சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் என்பவற்றுடன் இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர பத்திர (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு பாடத்திலாவது (பொதுச் சாதாரண பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

B. வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.-

(i) சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் என்பவற்றுடன் இன்னும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) தென் மாகாண உள்ளூராட்சிச் சேவையில் முதனிலைத் தரத்திற்குரிய தொழில்நுட்பவலரல்லாத அரைத்தொழில்நுட்ப அல்லது தொழில்நுட்பத் தரத்தில் 10 வருடங்கள் நிரந்தர சேவைக் காலத்தைப் பூர்த்தியாக்கியிருத்தல், விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம் வரை எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதைத் தவிர தண்டனை பெற்றிராதிருத்தல் வேண்டும். இன்னும் கிட்டிய 05 வருடங்களிலும் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **வயது** :

A. வருமான பரிசோதகர் சேவையின் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை, -

*விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்கு கூடாதவராகவும் இருத்தல் வேண்டும். எனினும் தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இக்கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று.*

***குறிப்பு.***- *மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று.*

5. **சம்பள முறை** :

A. வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை, -

*பொது நிருவாக சுற்றுநிருப இல. 06/2006 (IV) MN 4 - 2006 A பிரகாரம் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் .- ரூபா 13,120-10×145 - 11×170 - 10×240-10×320-ரூபா 22,040 ரூபாவாகும்.*

6. **சேவையில் சேர்வதற்கான பிரிவும் நிபந்தனைகளும்** :

(அ) *இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். பொது நிருவாக சுற்று நிருப இல. 06/2006 பிரகாரம் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திரட்டு நிதிக்கு சந்தா நிதி செலுத்துதல் வேண்டும்.*

(ஆ) *திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரர்கள் 03 வருடங்கள் நன்னடத்தைக் காலப் பிரிவுக்கு உட்படல் வேண்டும். உத்தியோகத்தர் அரச சேவை ஆணைக்குழு அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் நடாத்தப்படுகின்ற முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அவர் நன்னடத்தைக் காலப் பகுதியினுள் அரச சேவையில், நடத்தையில், வரவில் திருப்தி என திணைக்களத்தின் முதல்வர் திருப்தியடைந்திருந்தால் மூன்று வருடங்கள் முடிவில் பதவியில் நிரந்தரமாக்கப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர் ஒருவர் ஒரு வருட கால வேலை பார்த்தலின் கீழ் நியமிக்கப்படுவதுடன் அவர் வேலை பார்க்கும் காலத்திற்குள் அரச கருமங்களில், நன்னடத்தைகளில் திருப்திகரமாக நடந்திருந்தால் மற்றும் ஏனைய நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பின் வேலை பார்த்த காலக்கடைசியில் பதவியில் நிரந்தரமாக்கப்படும்.*

7. **மொழிமூலம்** .- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சை நடைபெறும். விண்ணப்பிக்கும் மொழி பின்னர் மாற்றப்படமாட்டாது.

8. **பரீட்சை முறை** :

A. வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை, -

*பரீட்சார்த்திகள் கீழ்க்காணும் விடயங்களடங்கிய எழுத்துப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். (அரச நடவடிக்கைகளுக்காக பரீட்சார்த்திகள் தகைமைகளையும் ஆற்றல்களையும் பரிசீலிப்பதற்காக இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படுகிறது).*

| *விடயம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* | *நேரம்* |
|---|---|---|---|
| புலமைப் பரீட்சை | 100 | 40% | 1 மணி |
| மொழி ஆற்றல் | 100 | 40% | 1 மணி |

(i) *புலமைப் பரீட்சை.*- பரீட்சார்த்தியின் பொது அறிவு, தர்க்கிக்கும் ஆற்றல், கருத்து வெளியிடல், எண்ணியலான திறமைகள், விளங்கும் ஆற்றல் என்பவற்றை அளவிடும் வினாப்பத்திரம் ஒன்றாகும்.

(ii) *மொழி ஆற்றல்.- அட்சர வடிவமைப்பு, இலக்கணப் பாவணை, கலப்பற்ற விளக்கமான கருத்து வெளியிடல், மொழியியல் ஈடுபாடு பற்றிய விளங்கும் தன்மை, சாராம்சம், கட்டுரை ஆற்றல் என்பவை தொடர்பான அறிவைப் பரிசீலிக்கக் கூடியவாறான வினாப்பத்திரம் ஒன்றாகும். நியமனம் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்குப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தளவு நூற்றுக்கு ஐம்பது (50%) பெறல் வேண்டும்.*

B. வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, -

| *விடயம்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* | *நேரம்* |
|---|---|---|---|
| பொது அறிவு | 100 | 40% | 1 மணி |
| மொழி ஆற்றல் | 100 | 40% | 1 மணி |

(i) *பொது அறிவு.- அரச கருமங்களுக்காகப் பரீட்சார்த்தியின் திறமைகள், உளச்சார்பு என்பவற்றைப் பரிசீலனை செய்யும் சமூகப் பொருளாதாரப் பின்னணி, உள்நாட்டுத் தகவல்கள், அமைச்சுகள்/திணைக்களங்களின் வேலைத்திட்டங்கள் அமுலாக்கல் பற்றிய வினாக்கள் உள்ளடங்கிய பல்தேர்வு வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரம் ஒன்றாகும்.*

(ii) *மொழி ஆற்றல்.- அட்சர அமைப்பு, இலக்கணப் பாவணை, கலங்கமற்ற தெளிவான கருத்து வெளியீடு, மொழி ஈடுபாடு பற்றிய விளங்கும் தன்மை, சாராம்சம், கட்டுரை ஆற்றல் என்பவற்றை அளவிடும் வினாப்பத்திரம் ஒன்றாகும்.*

*நியமனம் பெறத் தகைமை பெறுவதற்காக மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையில் குறைந்த அளவான நூற்றுக்கு ஐம்பது (50%) பெறல் வேண்டும்.*

*9. பரீட்சை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள், பரீட்சை நிலையங்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் பின்வருமாறு :-*

*ஏதாவது ஒரு நகரத்திற்காக விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை இல்லாதவிடத்து கிட்டிய நகரமொன்றில் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்தி நகரம் எனக் குறப்பிட வேண்டியதாவது பரீட்சார்த்தி நிரந்தர வசிப்பு மாவட்டத்தின் கீழ் உள்ள நகரமொன்றை மாத்திரமாகும்.*

| மாவட்டம் | நகரம் |
|---|---|
| காலி | காலி |
| மாத்தறை | மாத்தறை |
| ஹம்பாந்தோட்டை | தங்காலை |

*10.* **விண்ணப்பப்படிவம்.**- *(அ) இவ்வறிவித்தலின் கடைசியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ4 (செ. மீ. 21 × 30) அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பிரயோசனப்படுத்தி விண்ணப்பப்பத்திரத்தைத் தயாரித்தல் வேண்டும். இல. 01 முதல் 09 வரையான தலைப்புகள் முதலாவது பக்கத்திலும் இல. 10 முதல் 12 வரையான தலைப்புகள் இரண்டாவது பக்கத்திலும் மிகுதியை மூன்றாவது பக்கத்திலும் உள்ளடக்கியவாறு தயாரித்து அதற்குரிய தகவல்களை சொந்தக் கையெழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும். தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோக இணையத்தளமான* www.psc.sp.gov.lk *மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.*

*(ஆ) பிழையின்றி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.10.31 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, 06 ஆவது மாடி, மாவட்டச் செயலகக் கட்டிடம், காலி" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "தென் மாகாண அரச சேவையில் ............... பதவிக்கு ஆட்சேர்க்கும் (மட்டுப்படுத்தப்பட்ட அல்லது திறந்த எனக் குறிப்பிட்டு) போட்டிப் பரீட்சை 2013 ........... மாவட்டம் (நிரந்தர வசிப்பிட மாவட்டத்தை குறிப்பிடவும்)" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப் படக்கூடியதாகும். எவ்வித சான்றிதழ் ஒன்றோ அல்லது நிழற்படப் பிரதி ஒன்றோ விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் கூடாது.*

(இ) விண்ணப்பப் படிவத்தை தான் தோற்றும் மொழியில் தயாரித்தல் வேண்டும்.

*(ஈ) அரச சேவையிலும் மாகாண அரச சேவையிலும் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்பத்திரங்களைத் திணைக்களத்தின் முதல்வர் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(உ) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத விண்ணப்பப்பத்திரங்கள், பூரணமற்ற தகவல்கள் குறித்துள்ள மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுக்கள் உள்ளடங்கிய விண்ணப்பப் படிவங்கள், பணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்கள் ஒட்டப்படாத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தாமதமாகிக் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் பற்றி இவ்வாணைக் குழுவால் பொறுப்பேற்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அல்லது நிராகரிக்கப்பட்டமை பற்றி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.*

*(ஊ) விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் அல்லது சமாதான நீதவான் ஒருவர் அல்லது சத்திய ஆணையாளர் ஒருவர் அல்லது பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர் அல்லது முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது காவல் துறையில் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உயர் நிலைப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது அரச அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.*

*11.* **பரீட்சைக் கட்டணம்.**- *(அ) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கின்ற அனைத்து விண்ணப்பதாரர்களிலும் பரீட்சைக் கட்டணமாக 400 ரூபா காசாக தென் மாகாணப் பிரதான செயலாளரின் 2003-10-13 இலக்கம் கொண்ட வரவுத் தலைப்புக்கு வரவில் வைப்பாகும் வண்ணம் தென் மாகாணத்தினுள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் உரிய இடத்தில் கழராத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாகும். இவ்விறிவித்தலின் பிரகாரமின்றிப் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு கொண்ட விண்ணப்பப்பத்திரங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் எக்காரணங் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட்டவோ மாற்றஞ் செய்யப்படவோ மாட்டாது.*

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை விநியோகஞ் செய்தல், விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதெனக் கவனத்தில் கொள்ளக் கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளால் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்கு அவர்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தினுள் தோற்றும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும்படி தமது உண்மைத் தன்மையை நிரூபித்தல் வேண்டும். அதற்காகக் கீழ்க்காணும் ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் விநியோகஞ் செய்யப்பட்ட அடையாள அட்டை.

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுப் பிரயாணக் கடவுச்சீட்டு.

பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடில் பரீட்சார்த்திகள் கீழ்க்காணும் விபரங்களுடன் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுத்து மூலம் அல்லது தொலைபேசி இல. 091-2234309 மூலம் அறிவித்தல் வேண்டும் :-

I. பரீட்சையின் பெயர் :----.

II. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :----.

III. முழு விலாசம் :----.

IV. விண்ணப்பப்படிவம் அஞ்சல் செய்த அலுவலகம், பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும் :----.

விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாது அல்லது காணாமற் போனமை காரணமாக அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதிருப்பின் அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப் படிவத்தின் பிரதியுடனும் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியுடனும் ஆணைக்குழு அலுவலகத்திற்கு விண்ணப்பதாரர் அல்லது விண்ணப்பதாரி வருகை தரல் வேண்டும்.

12. **தேர்ந்தெடுக்கும் முறை**.- (அ) வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, திறந்த போட்டிப் பரீட்சை, - இப்பதவிகளுக்காக மேலே 8 ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ள பரீட்சைகளின் காட்டப்பட்ட திறமையையும் பொது நிருவாக சுற்று நிருப இல. 15/90 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்தின் பிரகாரமும் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். (நியமனம் வழங்கும் போது தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் நியமனம் வழங்க வேண்டிய கடைசி முன்னுரிமை மட்டத்தில் சமமான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் கூடுதலாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தி கல்வித் தகைமைகளின் அடிப்படையில் கூடிய தகுதியுடையவர்கள் வரிசை முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

(ஆ) வருமான பரிசோதகர் சேவையில் தரம் III, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, - இப்பதவிகளுக்காக மேலே 8 ஆவது பந்தியில் காட்டப்பட்டுள்ள பரீட்சைகளில் காட்டப்படுகின்ற மாகாணத் திறமை அடிப்படையில் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காகவுள்ள நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். - தகைமைகளைப் பரிசீலனை செய்யாது அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று அறிவித்தலின் பிரகாரம் தகைமைகள் இல்லாத விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறத் தகுதி பெற மாட்டார்கள்.

13. பொய்யான தகவல்களை விநியோகித்தல்.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக எந்தவொரு பரீட்சகருக்கும் தகைமைகள் இல்லாதிருந்தமை வெளியாகினால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய எச்சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்தித் தன்மையை செல்லுபடியற்றதாக்க முடியும். நியமனம் பெற்றதன் பின்னராயினும் பரீட்சார்த்தியால் முன்வைக்கப்பட்டிருந்த தகவல்கள் பொய்யானவையென அறிந்துகொண்டே முன்வைக்கப்பட்டதென நிரூபிக்கப்படின் அவர் சேவையில் இருந்து நீக்கப்படுபவர்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏனைய விடயங்கள் பற்றிய கடைசி முடிவெடுத்தல் தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவுக்குரியதாகும்.

14. இவ்வறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஒவ்வாமைகள் இருப்பின் சிங்கள மொழி மூல அறிவித்தலில் உள்ளவாறே வலுப் பெறுகின்றது.

ஸமன் தர்ஷன பாண்டிகோறாள,
செயலாளர்,
தென் மாகாண அரசாங்க சேவைகள்
ஆணைக்குழு.

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
"மாவட்ட செயலகக் கட்டிடம்",
6 ஆவது மாடி,
காலி,
2013.08.01.

(இவ்வறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால் உண்மையற்ற வகையில் தயாரிக்கப்பட்டு முன்வைக்கும் அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பு ஏற்கப்படமாட்டாது).

மாதிரி விண்ணப்பப்படிவம்

பதவிக்குரிய அடையாள அட்சரம் ☐ (A/ B)

திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட ☐

நிரந்தர வதிவிட மாவட்டம் ☐

தென் மாகாண அரச சேவையில் .................................. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் ............................ போட்டிப் பரீட்சை - 2013

அலுவலக உபயோகத்திற்கு ☐

பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம் - 02, தமிழ் - 03, ஆங்கிலம் - 04) ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்).

(பரீட்சை அறிவித்தலின் 11 ஆவது பந்தியைப் பார்க்கவும்).

1. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்கள் கடைசியாக அமைய முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (i) தமிழில் :----.
   (ii) ஆங்கிலத்தில் (கெபிட்டல் எழுத்தில்) :- Mr./ Mrs./ Miss :----.
   உதாரணம் :- NIMAL M. A. S., நிமல் எம். ஏ. எஸ்.
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
   (i) தமிழில் :----.
   (ii) ஆங்கிலத்தில் (கெபிட்டல் எழுத்தில்) :----.
3. (i) நிரந்தர விலாசம் :----.
   (ii) சேவையாற்றும் இடத்தின் பெயரும் விலாசமும் :----.
   (iii) தொலைபேசி இல. :----.
4. அனுமதிப் பத்திரத்தை அனுப்ப வேண்டிய விலாசம் :----.
   (i) தமிழில் :----.
   (ii) ஆங்கிலத்தில் (கெபிட்டல் எழுத்தில்) :----.
5. ஆண்/பெண் பால் : பெண் - 1, ஆண் - 0 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்).
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐
   விநியோகிக்கப்பட்ட திகதி :----.
7. விவாகமானவர்/விவாகமாகாதவர் :----. விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்).
8. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

   விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :- வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

9. இலங்கைப் பிரசையானது பிறப்பினாலா? பதிவினாலா? :----.
(i) உமது நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
(ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(iii) கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
(iv) மாவட்டத்தில் வசிக்கின்ற கால வரையறை :----. திகதி முதல் .................திகதி வரை

10. கல்வித் தகைமைகள் :----.
10.1 க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை பற்றிய விபரங்கள் :----.

| முதல் அமர்வு | | | | இரண்டாம் அமர்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருடம் :----.<br>பரீட்சைச் சுட்டெண் :----. | | | | வருடம் :----.<br>பரீட்சைச் சுட்டெண் :----. | | | |
| பாடம் | சித்தி | பாடம் | சித்தி | பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
| 1.<br>2.<br>3.<br>4. | | 5.<br>6.<br>7.<br>8. | | 1.<br>2.<br>3.<br>4. | | 5.<br>6.<br>7.<br>8. | |

10.2. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை பற்றிய விபரங்கள் :----.
வருடமும் மாதமும் :----. பரீட்சை சுட்டெண் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1.<br>2. | | 3.<br>4. | |

10.3. பட்டம் பற்றிய விபரம்/பெற்றுள்ள தொழில் தகைமைகள் :----.

| பட்டம்/டிப்ளோமா/ தொழிற் சான்றிதழின் பெயர் | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் | சித்திகள் | பல்கலைக்கழகத்தின்/ விநியோகிக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

11. தற்போதும் அரச சேவையில் ஈடுபட்டுள்ளவராயின் :-
(i) திணைக்களம் /நிறுவனம் :----.
(ii) தற்போதைய பதவி :----.
(iii) நியமனம் பெற்ற திகதி :---- திகதி முதல் ............... வரை
சேவைக் காலம் :---- .................. வருடங்கள்
(iv) நிரந்தர ஓய்வூதியம் உரித்துள்ளதா அல்லது தற்காலிகமானதா என்பது பற்றி :----.
(சேவையில் நிரந்தரப்படுத்திய கடிதத்தின் பிரதியை இணைக்கவும்).

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இவ்விடத்தில் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்).

| |
|---|
| |

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானதென்றும் பிழைகளற்றதென்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய ..................... பிரதேச செயலாளர் அலுவலக இல. .............. உம் ................................. திகதியும் கொண்ட பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் இப்பரீட்சைக்கு நான் தகுதியற்றவன் எனப் பரீட்சைக்கு முன்னர் அல்லது

பரீட்சைக்குப் பின்னர் அல்லது நியமனம் பெற்றதன் பின்னர் தெரியவரின் சேவையில் இருந்து நிறுத்தப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்தல் சம்பந்தமாக தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**- இவ்விண்ணப்பப் பத்திரத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி........ ...................................... எனக்கு நன்றாக அறிமுகமானவர் என்றும், ................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை வைத்தார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
(உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.)

திகதி :----.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை வைக்கவும்).

(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவை செய்பவரானால் கீழுள்ள உறுதிப்பத்திரத்தைத் திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்த வேண்டும்).

**நிறுவனத் தலைவரின்/திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இவ்விண்ணப்பப் பத்திரத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................ என்பவர் .................................... அலுவலகத்தில்/ நிறுவனத்தில் .............................. திகதி முதல் ....................... பதவியில் சேவையாற்றுபவர் என்றும் அவரது சேவை திருப்திகரமானது என்றும் இப்பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் நியமனம் கிடைக்கப்பெற்றால் அவரைத் தற்போதுள்ள பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் அவர் இதுவரை எந்த விதமான குற்றத் தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) உட்படவில்லை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவர்/திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

நிறுவனத் தலைவர்/திணைக்களத் தலைவரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை வைக்கவும்).

8-938

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.